ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

23.10.2025

1. பிரணவக்குடிலெனும் சபை கொண்டு
பிரபஞ்சம் வியக்க அரங்கன் யான்
சரவண சோதியாய் கலந்துமே
சற்குருவாய் சகலருக்கும் அற்புதம்

2. அற்புதம் தன்னை நிகழ்த்தி வர
அருட்சுவடி வழி குருவார அருளாசி
ஏற்பு கொண்டு என் மக்கள் தேறிட
இயம்பிடுவேன் விசுவாவசு துலையின் திங்கள்

3. திங்களிலே முதல் குருவார அருளாசியை
தேசிகன் யானும் உரைத்திடுவேன்
ஓங்காரக்குடிலை ஆறுமுகப் பெருமானும்
ஓங்கார சக்திபட காத்தருளிவர

4. அருளிவர கலிவாழ் மக்களெல்லாம்
ஆறுபடை வீடுதனை சேவித்த பலனை
வரமென பிரணவக் குடிலை அணுகி
வணங்கினாலே வாய்ப்பு கிட்டுமப்பா

5. அப்பனே அரங்கா முருகா என
அழைத்துமே வேண்டல் வைத்து
காப்பாயென சரணாகதி கண்டுவிட
கலியினில் சர்வபாதுகாப்பு தந்து

6. தந்துமே உடனிருந்து அருள்வோம்
தடைகளையும் வென்று காப்போம்
சிந்தை முழுக்க செபதபம் கூட்டி
செய்தவினை செய்வினைகளும் அகன்றிட

7. அகன்றிட வேண்டல் வைத்துவர
அனைத்தும் அக்கணமே அகற்றி
வகைபட பாதுகாப்பு தந்து
வருங்காலம்தனை வழிநடத்துவோம்

8. நடத்திட கலிவாழ் மக்களுக்கு
நன்மையும் ஞானமும் கிட்டிட
இடர்வெல்ல அரங்கன் யானும்
இனிதே உருவாக்கிய அன்னதானம்

9. அன்னதானம் எனும் ஜீவதயவுவழி
அனைவரும் அணுகி வந்துமே
அன்னதான சேவை வழிதன்னில்
அணுகிப் பொருளுதவி செய்து

10. செய்துமே தருமபலம் பெருக்கி
செப்பிட குடிலின் அருளமுது உண்டு
மெய்ஞானம் எனும் சன்மார்க்க
மகான்களின் பூசை கலந்துவர

11. வருகவே அரங்கனென் படைவழி
வையகமே ஞானப்படைகளாக
உருவாகி உலக மாற்றம் நிகழும்
உரைத்திட்ட அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி